★ தனி இதழ் 1 அணா ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE : 85630

நம் நாடு

தி. மு. க. தினஇதழ் — ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily ✶ The Official Organ Of The D.P.F.

மலர் 4] சென்னை: புரட்டாசி 4உ புதன் (19—9—56) ★ ★ வெளியூர் : புரட்டாசி 5உ வியாழன் (20—9—56) [இதழ் 86

மாவட்டத்தின் பெயர் மாற்றப்படுகிறது!

★

இந்தூர், செப். 19—

"'விதேசம்' பண்டைய இந்தியாவில் சிறந்த கலாச்சாரம் படைத்துப் புகழ்பெற்ற இடமாக விளங்கியது. அங்குதான் அசோகரின் மனைவியும் பிறந்தாள் என்றும் வரலாறு கூறுகிறது; எனவே மத்திய பாரத் மாநில அரசாங்கம் அந்த இடத்திற்கு இப்பொழுது வழங்கப்படும் 'பில்சா' என்ற பெயரைமாற்றி 'விதேச' என்ற மாற்றுப் பெயர் வழங்கப் போவதாகத் தெரிகிறது.

'திராவிட நாடு' எங்கள் பிறப்புரிமை

தலைநகரில் இலட்சம் மக்கள் எழுப்பிய விடுதலை முழக்கம்

திராவிடம் எங்கள் தேசம்-அதன் விடுதலை எங்கள் இலட்சியம்

விடுதலை இன்றேல் வாழ்வு இல்லை

திரு. வி. க. திடலில் அண்ணா மற்றும் முன்னணி வீரர்கள் பரணி பாடினர்

சென்னை, செப். 19—

"'திராவிட நாடு' எங்கள் பிறப்புரிமை" என்று இலட்சத்திற்கும் மேற்பட்ட சென்னை மக்கள், நேற்று மாலை திரு. வி. க. திடலில் (கான்ரான்ஸ்மித் நகர்) கூடி விண்ணதிர முழக்கமிட்டனர்.

'திராவிட நாடு திராவிடருக்கே' என்ற இலட்சிய ஈடேற்றத்திற்கு எங்கள் வாழ்வை ஒப்படைப்போம்—என்ற உறுதியை, முழக்கம் எழுப்பிய அந்த மக்களது பொங்கி வழிந்த ஆர்வமும் உற்சாகமும் எடுத்துக் காட்டின.

திராவிட நாடு விடுதலை நாள் கொண்டாட்டத்தை ஒட்டி நேற்று தலைநகரில் - திரு.வி.க. திடலில் தி.மு.கழகத் தலைமை நிலையம் சிறப்பானதோர் பொதுக்கூட்டத்தை நடத்தியது.

கூட்டத்திற்கு நகரின் பல பகுதிகளிலிருந்தும் மக்கள் திரண்டிருந்தபோதிலும், கூட்டம் நடைபெற்ற திரு வி. க. திடல் அமைந்துள்ள இடம் பெரும்பாலும் தொழிலாளர் வாழும் பேட்டை என்பதால், கூட்டத்தின் பெரும் பகுதியைத் தொழிலாளர்களே நிரப்பியிருந்தனர்.

தாய்மார்கள் தங்கள் குழந்தைகளையும் அழைத்துக் கொண்டு விடுதலை விழாவில் ஆயிரக்கணக்கில் பங்கு கொண்டது குறிப்பிடத்தகுந்ததாகும்.

மாலை 5 மணி முதலே சாரை சாரையாகப் படையெடுத்துத் திடலை முற்றுகையிட்டுக்கொண்டிருந்த மக்களை, அழகுற அமைந்திருந்த விசாலமான பெரிய மேடையின் இருமருங்கிலும் ஓங்கிவளர்ந்த கம்பங்கள் எட்டிலும் பட்டொளி வீசிப் பறந்துகொண்டிருந்த இரு வண்ணக் கொடிகள் 'வாருங்கள்' என்று வரவேற்று, 'வந்து அமருங்கள்! விடுதலை வாழ்வு பெற வழிகாண வாருங்கள்!' என்று கூறிக்கொண்டிருந்தன.

"விடுதலை பெற வழி தெரியாமல் திகைக்க வேண்டாம்; ஒளிதர இதோ நானிருக்கிறேன்' என்று, மேடையின் உச்சியில் முளைத்திருந்த 'உதய சூரியன்' கூடியிருந்த மக்களைக் கனிவுடன் நோக்கினான்.

கூட்டத்தில் கலந்துகொள்வதற்காக, அண்ணா உட்பட அனைவரும் மேடைக்கு வந்தபோது மக்கள் மகிழ்ச்சிப் பெருக்கால் பேரார்வாரம் செய்தனர்.

கூட்டமும் இரவு 7 மணியளவில் துவங்கிற்று.

'தி. மு. கழகத் தலைமை நிலயச் சார்பில் நடைபெறும் இந்த விடுதலை நாள் கூட்டத்திற்குத் தலைமை தாங்கி நடத்தித் தருமாறு கேட்டுக்கொள்கிறேன்' என்று தோழியர் சத்தியவாணி—முத்து அம்மையார் அவர்களைத் தோழர் கே. எம். கண்ணபிரான் அவர்கள் முன்மொழிந்து மகிழ்ந்தார்.

அதனை வழிமொழிந்து பேசும்போது நடிகத் தோழர் டி. வி நாராயணசாமி அவர்கள், "விடுதலை நாள் கொண்டாடுகிற இன்று, நமது விடுதலைக் கோரிக்கை நியாயமானது என்பதை எடுத்துரைக்கும் ஆதாரங்கள் பெருகியிருக்கின்றன; நாம், 'திராவிட நாடு திராவிடருக்கே' என்றபோது, 'எலி வளை எலிகளுக்கே' என்று கேலி பேசியோர் இன்று இல்லை" என்று விளக்கினர்.

தலைமை ஏற்ற தோழியர் சத்தியவாணிமுத்து, "வெள்ளையர் இந்தியருக்கு அன்னியர் என்று எந்தக் காரணங்களைக் காட்டிக் கூறினார்களோ அதே காரணங்களைக் காட்டித்தான் நாமும், 'திராவிடரான நமக்கு வடவர் அன்னியர்; ஆகவே அவர்களது பிடியிலிருந்து விலக வேண்டும்', என்று கோருகிறோம் 'சுயராஜ்யம் எங்கள் பிறப்புரிமை', என்று காங்கிரசார் கூறியதையே நாம், 'திராவிடம் நமது பிறப்புரிமை' என்று முழங்குகிறோம்' என்று கூறினார்கள்.

"தெற்றே எல்லைப் பகுதிகளைக் கோட்டைவிட்டார்கள்; தேவிகுளம், பீர்மேடு வட்டங்களைப் பறிகொடுத்தார்கள்; இப்படி, தமிழர் தம் நலன் பேணமுடியாத கையாலாகாதவர்களிடம் ஆட்சியை இன்னும் எத்தனை நாளைக்கு ஒப்படைப்பது?" என்று கேட்ட தோழர் டி. சண்முகம் எம். எல். ஏ. அவர்களது குரலில் உறுதி தொனித்தது.

அடுத்து ஒலிபெருக்கி முன்வந்த தோழர் ஏ. கோவிந்தசாமி, எம். எல். ஏ, அவர்கள், "எதிர்க் கட்சிகளுக்கு உரிய மரியாதையைத் தரத் தெரியாத காங்கிரசாரின் ஆணவத்திற்கு, வரப்போகும் பொதுத் தேர்தலில் தி. மு. கழகம் சரியான சாட்டையடி தரப் போகிறது" என்று முழக்கினர்.

'விடுதலைதான் 1947-ம் ஆண்டிலேயே பெற்றுவிட்டோமே — இன்னும் என்ன இவர்கள் விடுதலை நாள் கொண்டாடுவது?' என்று பேசும் சந்தேகப் பிராணிகளுக்கு, இந்த மாநில மந்திரிகள் எந்தக் காரியத்திற்கும் டில்லி நோக்கிக் காவடி எடுப்பதைச் சுட்டிக் காட்டி சந்தேகம் நீக்க விளக்கம் தந்தார் தோழர் காஞ்சி - கல்யாணசுந்தரனார் அவர்கள்.

அடுத்துப்பேசிய தோழர் தில்லை வில்லாளன் அவர்கள், ஆட்சியாளரை மக்களின் நகைப்பிற்கு இலக்காக்கி, அவர்களது போக்கு விவேகமானதாகவோ வீரம் நிறைந்ததாகவோ இல்லாதிருப்பதை உபமானக் கதைகளால் விளக்கிக் காட்டினர்.

"திராவிட மக்களுக்கு இந்திய அரசியல் சட்டம் பொன் விலங்கு போன்றதாகும். நம்முடைய உண்மையான பிரதிநிதியல்லாத யாரோ சிலரால் தயாரிக்கப்பட்ட ஒரு அரசியல் சட்டம், திராவிட மக்களை வடவருக்கு அடிமைப்படுத்தியிருப்பது, சகித்துக் கொள்ளக் கூடியதல்லவே!" என்று முழக்கமிட்டவர் தோழர் கே. ஏ. மதியழகன் என்பதைச் சொல்லவேண்டுமா?

"திராவிடம் கதவில்லாத வீடாக இருக்கிறது; அந்த வீட்டின் காவல்காரர்களாக உள்ள மாநில சர்க்கார், வடநாட்டுத் 'திருடர்'களுக்குத் துணை போகிறவர்களாயிருக்கின்றனர்" என்ற உண்மையைத் துலக்கினர் தோழர் காஞ்சி—மணிமொழியார்.

"நம்மைத் தேசத் துரோகிகள் என்கிறார்கள்—தங்கள் தேசம் எது என்பதையே அறியாதவர்கள்! இந்தியாவை 'தேசம்' என்கிறார்கள், அவர்கள்! நாம், 'இந்தியா ஒருதுணைக்கண்டம்; அதில் திராவிடம் எங்கள் தேசம்' என்கிறோம்; அதுதான் உண்மையும் கூட! அந்த உண்மையை ஒப்ப மறுப்பவர்கள்தான் திராவிடத் துரோகிகளே தவிர, திராவிடத்திற்கு விடுதலை கோரும் நாமல்ல" என்று முரசறைந்தார் தோழர் மு கருணாநிதி அவர்கள்.

"இது நமது தாயகம்—திராவிடம்; நாம்—திராவிடராகிய நாம், நமது தாயகமாகிய திராவிடத்தை வடநாட்டு ஏகாதிபத்தியத்தின் பிடியிலிருந்து மீட்க நமது வாழ்வையே அர்ப்பணிப்போம் என்று இன்று சூளுரைத்துக் கொள்வோம்" என்றார், அடுத்துப் பேசிய தோழர் முகவை ஆர். எஸ், பாண்டியன்.

"அண்ணாவின் வழி நடப்போம்! விடுதலை பெறுவோம்!" என்று, கூவினார் தோழர் டி. கே. பொன்னுவேலு.

"திராவிடம் எங்கள் பிறப்புரிமை" என்று, மக்களை முழக்கமிடவைத்தார் அடுத்துப் பேசிய கழகத் துணைப் பொதுச்செயலாளர் தோழர் என். வி. நடராசன்.

இறுதியாக, கூடியிருந்த இலட்சத்திற்கும் அதிகமான மக்களின் பேராவலைப் பூர்த்தி செய்ய நமது அண்ணா அவர்கள் ஒலிபெருக்கி முன்வந்தபோது, கூடியிருந்தோர் மகிழ்ச்சிப் பெருக்கால் செய்த பேராரவாரம், 'திராவிடத்திற்கு விடுதலைதான் கிட்டிவிட்டதோ!' என்று ஐயுறும்படி இருந்தது.

திராவிடத்தின் செல்வங்கள் மூன்றுக்குப் பெயரிட்டுவிட்டு நமது அண்ணா அவர்கள், கழகம் தோன்றியதிலிருந்து இன்றுவரை உள்ள நிலைகளைக் குறித்து அழகியதோர் கருத்தோவியம் தீட்டினார்கள்; தாயகத்தின் விடுதலைக்கான வழிவகைகளை அடுக்கிக் காட்டினார்கள். விடுதலை இன்றேல் வாழ்வில்லை என்று அறைகூவினார்கள். அந்த விடுதலையைப் பெற, நாளுக்கு நாள் பெருகிவரும் மக்களின் ஆதரவு மேலும் பெருகவேண்டும் என்பதை எடுத்துரைத்தார்கள்.

அண்ணா அவர்களின் இன்றையப் பேருரையைக் கேட்டவர்கள் மட்டுமே 'பாக்கியவான்கள்' என்று, உரை கேட்டுத் திரும்பிய மக்கள் கூறிச் சென்றனர்.

தலைவர் முடிவுரைக்குப் பின் தோழர் வி. எஸ். கோவிந்தராசன் நன்றிகூற கூட்டம் இனிது முடிவுற்றது.

கூட்டத்தில் உண்டியல்மூலம் ரூ. 112—2—9 வசூலாயிற்று.

கூட்டத்திற்கான மேடை அமைப்பு, தோரணங்கள் ஆகிய எல்லா ஏற்பாடுகளையும், 17, 18, 19, 23-வது வட்ட தி. மு. கழகத் தோழர்களும் 24—வது வட்ட திரு. வி. க. மறுமலர்ச்சி மன்றத் தோழர்களும், தோழர் கே. எம். கண்ணபிரான் அவர்களும் சேர்ந்து சிறப்புறச்செய்து அனைவரின் பாராட்டுதலையும் பெற்றனர்.

(க. தி.)

[சொற்பொழிவுகளின் விவரம் தொடர்ந்து வெளிவரும்]

ஜனநாயக உரிமை பறிபோகிறது

கருப்புக் கொடி காட்டிய அகாலிகள்மீது கண்ணீர்ப் புகைப் பிரயோகம்

பாட்டியாலா, செப். 18—

'பெப்சு'வின் முன்னாள் முதலமைச்சர் சர்தார் கியான் சிங் ரேர்வாலா, கோட்டாபுரத்தில் நடைபெற்ற காங்கிரஸ் அரசியல் மாநாட்டிற்குத் தலைமை தாங்க வந்திருந்தார்.

காங்கிரசைப் பலப்படுத்துவதன் மூலமே இந்து-சீக்கியர்களின் ஒற்றுமையைப் பலப்படுத்த முடியும் என்றும் மக்களுக்கு நல்லது செய்யக்கூடியது காங்கிரஸ் ஒன்றுதான் என்றும் அவர் கூறி வருகிறார்.

அங்குள்ள 'ஜனசங்க' இயக்கத்தை அவர் எதிர்ப்பவராவார்.

அகாலி தளத்தைக் காட்டிக் கொடுக்க முனைந்தார் என்பதால், அவர் மாநாட்டிற்கு வருகையில் 300-க்கு மேற்பட்ட அகாலிகள் கருப்புக் கொடி காட்டி ஆர்ப்பாட்டம் செய்திருக்கின்றனர்.

அவர்கள்மீது போலீசார் கண்ணீர்ப் புகைப் பிரயோகம் செய்து பலாத்காரமாக விரட்டினராம்.

கோல்டு கோஸ்டு விடுதலை பெறுகிறது

அடுத்த மார்ச் முதல் தனி நாடு!

லண்டன், செப். 19— ஆப்பிரிக்காவில் தற்போது பிரிட்டிஷ் ஆட்சியின்கீழ் உள்ள கோல்டு கோஸ்ட் அடுத்த ஆண்டு மார்ச் 6-ந் தேதி முதல் சுதந்திரத் தனிநாடாகிறது.

பிரிட்டிஷ் காமன்வெல்த்திற்கு உட்பட்டு பிரிட்டிஷ் பார்லிமெண்டின் அங்கீகாரத்துடன் இந்தச் சுதந்திரம் வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

தோழர்களே! வயது வந்தோரை வாக்காளர்களாக ஆக்குங்கள்

நம் நாடு

திராவிடத்தின் இதழ் — ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

சென்னை 19—9—'56 புதன்

தேர்தல் சூழ்நிலை

பொதுமக்களின் ஆதரவை நாளுக்குநாள் இழந்து வருவதைக் காங்கிரஸ் நன்கு உணர்ந்துகொண்டு வருகிறது. அதே நேரத்தில், அப் பொது மக்கள் ஆதரவு நமது முன்னேற்றக் கழகத்திற்குப் பெருகி வருவதையும் அக்கட்சி கண்டு வருகிறது.

ஆளும் கட்சியாகத் தான் மாறிவிட்ட பிறகு, அடிப்படை இலட்சியம் எதுவுமின்றிச் செயல்பட்டு வருவதினால், ஏதோ சொந்தக் காரணத்திற்காகச் சிலர் தன்னைச் சுற்றி வட்டமிட்டுக் கொண்டிருக்கின்ற உண்மையையும் காங்கிரஸ் தெளிவாகத் தெரிந்து கொண்டு இருக்கிறது. இந்தச் சிலரின் ஆதரவும் தேவைப்படும் நேரத்திற்குக் கிடைக்கப் பெறுது போகுமே என்பதையும் காங்கிரஸ் விளங்கிக் கொண்டு இருக்கிறது.

காங்கிரஸ் போட்ட திட்டங்களால் தங்களது வாழ்வு அணுவளவும் முன்னேறவில்லையே என மக்கள் திகைப்படைந்திருக்கும் தகவலை காங்கிரஸ் அறிந்தே இருக்கிறது. ஏமாற்றத்தினால் மக்கள் பெற்றுள்ள எரிச்சலையும் எதிர்ப்புணர்ச்சியையும் அக்கட்சி புரிந்துகொண்டும் இருக்கிறது.

தேர்தலில் பங்கு கொள்ளுவது என்ற முடிவிற்கு நமது கழகம் வருவதற்கு முன்புவரை, வரப்போகும் தேர்தலைக் குறித்துக் காங்கிரஸ் கட்சி கடுகளவும் கவலை கொள்ளாது இருந்தது. தன் மீது பொது மக்களுக்கு எவ்வளவுதான் வெறுப்பும எரிச்சலும் இருந்தாலும், தகுதிவாய்ந்த எதிர்க்கட்சி எதுவும் தேர்தலில் பங்கு கொள்ளப் போவதில்லை என்ற திடநம்பிக்கையில், எப்படியும் தேர்தலில் தன்னை ஆதரிப்பதை விடப் பொதுமக்களுக்கு வேறு கதி கிடையாது என்ற அற்ப சந்தோஷத்தில் காங்கிரஸ் கட்சி இதுவரை காலங்கழித்து வந்தது. ஆனல், அந்த மகிழ்ச்சியை, தேர்தலில் பங்கு கொள்வது என்ற நமது கழகத்தின் முடிவு, தட்டிக் கவிழச் செய்து விட்டது. இதன் விளைவாகக் காங்கிரஸ் கட்சிக்கு அளவு கடந்த ஆத்திரம் பொங்கி வழியத் தொடங்கி இருக்கிறது. இதன் காரணமாகத்தான் அக்கட்சி, நமது கழகத்தின் குறிக்கோள் குறித்துத் தீவிரமாகத் தூற்றிவரும பணியை மேற்கொண்டு இருக்கிறது.

நாட்டின் பெரும்பாலான வாக்காளர்களின் நம்பிக்கையைக் காங்கிரஸ் இழந்துவிட்டிருக்கிறது என்பது பிரத்யட்ச உண்மையாகும். நமது கழகத்திற்கு இயல்பாக இருந்துவரும் மக்கள் ஆதரவை நாம் மதிப்பிட்டுக்கொள்வதுடன், காங்கிரஸ் கட்சியை எதிர்க்கும் மனப்போக்குடன் எந்தக் கட்சியிலும் பற்றுக்கொண்டில்லாது இருக்கும் எஞ்சியுள்ள மக்களின் ஆதரவையும நமது கழகத்தின் பக்கம திருப்பவேண்டும். அவர்களின் ஆதரவிற்குத்தான் தேர்தல் முடிவை நிச்சயிக்கும் ஆற்றல் இருக்கிறது என்பதை நாம் மறந்துவிடக்கூடாது.

நாட்டில் உள்ள மொத்த வாக்காளர்களுக்கும் தேர்தலில் பங்குகொள்ள இருக்கிற கட்சிகளுக்கும் இருக்கும் தொடர்பு இந்த அளவில்தான் இருந்துவருகிறது. இந்தச் சூழ்நிலையை விளக்கமாகத் தெரிந்து, வாக்காளர்களின் பேரன்பும் பேராதரவும் நமது கழகத்திற்கு இருக்கும்படி, அபேட்சகர்களைத் தேர்ந்தெடுப்பதில் நாம் எச்சரிக்கையாகச் செயலாற்ற வேண்டும்.

வாக்காளரைக் குறித்த இப்பொது மதிப்பீட்டுக்கு மாருக, மாவட்டத்திற்கு மாவட்டம் வாக்காளர்களின் மனப்பாங்கில் மாறுபாடுகள் இருப்பது இயல்பேயாகும். அவைகளைத் தெரிந்து செயல்பட, அத்தகையவர்களை நேராக அணுகி, அவர்களின் விருப்பம் அறிவதுதான் சிறந்த ஏற்பாடாகும்.

மாவட்டம், வட்டம், நகரம், சிற்றூர், உட்கிளைகள் ஆகிய பல்வேறு கழக அமைப்புகளைக் கலந்து பேசி அபேட்சகர்களைத் தேர்ந்து எடுப்பது முக்கியத்திலும் முக்கியமாகும். அதிலும் முக்கியமானது, அவ்வப் பகுதியில் இருந்துவரும் எக்கட்சிப் பற்றும் இல்லாது மக்களின் அன்பை மட்டுமே பெற்றுத் திகழும் நற்பண்பாளர்களின் கருத்தறிந்து செயல்படுவது.

கட்சியில் தீவிரமாக ஈடுபட்டிருப்போர், கட்சிப் பற்றுடையோர், கட்சி ஆதரவாளர்கள் ஆகியப் பகுதியினரின் துணையைப் பெற்று மட்டுமே காங்கிரஸ் கட்சி இதுவரை தேர்தலில் வெற்றி பெற்று வரவில்லை. ஆங்காங்கே உள்ள கட்சிப் பற்றற்ற நல்லியல்பினரின் ஒத்துழைப்பைப் பெற்றதின் பலனுகத்தான், தேர்தலில் காங்கிரஸ் வெற்றிபெற்று வந்திருக்கிறது என்பது எவ்வகையிலும் மிகையாகாது.

அவ்வழியை நாமும் பின்பற்றியாக வேண்டும். கட்சிப் பற்றற்ற நல்லவர்களின் ஒத்துழைப்பிற்கு முயற்சிப்பது என்ற பெயரால், கழக முக்கியஸ்தர்களின் கருத்தை ஒதுக்கித் தள்ளிவிடவும் கூடாது. அப்போக்கும் நமது தேர்தல் நோக்கத்தை வெற்றிபெறச் செய்யப் பயன்படாது.

காங்கிரஸ் கட்சிக்கு எதிராக உள்ள வேறு இரண்டொரு கட்சிகளுக்கும் குறிப்பிட்ட தொகுதிகளில் நமது கழகத்திற்கு இருப்பதைவிட, அக்கட்சிகளுக்கு ஆதரவு இருப்பது எதிர்பார்க்கக் கூடியதேயாகும். அத்தகையத் தொகுதிகளில், எத்தகைய நடைமுறையைக் கழகம் மேற்கொண்டால் காங்கிரஸ் கட்சியைத் தோற்கடிப்பது நிச்சயம் எனத் தெரிய வருகிறதோ, அத்தகைய நடவடிக்கையைத் துளியும் தயங்காது நமது கழகம் மேற்கொள்ள முன்வர வேண்டும். அதனல் காங்கிரஸ் கட்சியின் பலமும் குன்றும்; அதே நேரத்தில் நமது கழகத்திற்குப் புதிய ஆக்கமும் ஏற்படும.

சிற்சில தொகுதிகளில் நற்பண்பினராக உள்ளத் தனி நபர்களுக்கு ஆதரவு இருப்பது இயல்பு. அத்துறையிலும் சிந்தித்துப் பார்த்து காங்கிரஸ் கட்சியை முறியடிக்கத் தக்க வழியை நமது கழகம் பின்பற்றுவதே சாலச் சிறந்ததாகும்.

தேர்தல் சூழ்நிலை அறியும் இப்பொறுப்பான பணியை வெற்றிகரமாக நிறைவேற்ற நமது பொதுச்செயலாளரை விட வேறு பொறுப்பு வாய்ந்தவர் இருக்கமுடியாது. அவரைத் தலைவராகக் கொண்டு இத்துறையில் செயல்பட இருக்கும் குழு உறுப்பினர்கள் ஒவ்வொருவரும் பொறுப்புணர்விலும் கடமை உணர்ச்சியிலும் குறைந்திருப்பவர்களல்லர்.

தாயக விடுதலைக்காக அவர்கள் மேற்கொண்டுள்ள தேர்தல் சூழ்நிலை அறியும் பணியை வெற்றிகரமாக்குவது, ஆங்காங்கே உள்ள கழகத் தோழர்களின் நீங்காக் கடமையாகும் என சொல்லத் தேவையே இல்லை. அவர்களும் தங்கள் கடமையை ஒழுங்காகச் செய்து, குழுவின் பணியை நூற்றுக்கு நூறு வெற்றி பெறச் செய்யும்படி வேண்டிக் கொள்ளுகிறேம்.

'மானம் பெரிதென்றுர்—பதவியை வீசி எறிந்தார் தேஷ்முக்'

'வீசி எறிந்ததை வழித்தெடுத்தார் 'விதேசி' வியாபாரத்தில் சீமானுன கிருஷ்ணமாச்சாரி'

'தாயக உடைமையும் உரிமையும் பறிபோகிறது'

'பதவியில் ஒட்டிக்கொண்டு ஒய்யாரம் பேசுகின்றனர் தமிழ் மந்திரிகள்'

என். வி. நடராசன் சாடுகிறர்

"செங்குன்றம் — கிராண்ட் லைனில் திறவப்பட்டுள்ள வ. உ. சி. மன்றத்தினர், நான்காம் ஆண்டு விழாவினை இவ்வளவு சீரும் சிறப்புமாகக் கொண்டாடுவதைக் கண்டு மகிழ்ச்சியடைகிறேன்.

"'தமிழர்கள் தலைநிமிர்ந்து வாழ வேண்டும்; அந்தத் தன்மான வாழ்வைக் காண்பதே சொந்த வாழ்வை விடப் பெரிதாக நான் எண்ணி வருகிறேன்; வெள்ளையர்களின் ஏகாதிபத்தியப் பிடியிலிருந்துத் தாயகத்தை மீட்பேன்; நமது மூதாதையரின் பெருமையை உலகிற்கு உணர்த்துவேன்; அதன் வாயிலாக நாம் புதுவாழ்வு பெறுவோம்' என்றெல்லாம் சூளுரைத்துத் தூய்மையான பணியாற்றிய வீரர் வ. உ. சிதம்பரனர் அவர்களின் எண்ணம் இன்றைய சுதந்திர ஆட்சியில் நிறைவேற்றப்பட்டதா என்பதைத்தான் இங்கு பல்லாயிரக்கணக்கில் கூடியுள்ள தாய்மார்களும் தோழர்களும் சிந்தித்துப் பார்க்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

வேதனையுறுவர்!

"இவ்வித ஆற்றல் படைத்தத் தலைவர்களும், தொண்டர்களும் வளர்த்தத் தேசிய உணர்ச்சி, தேசிய இயக்கம் இன்று எவ்வளவு கீழ்நோக்கிச் செல்லுகிறது? எதெதெற்குப் பயன்படுகிறது? அந்த வீரர்கள் அமைத்தத் தேசிய முகாமில் இன்று வீற்றிருப்பவர்கள் யார் யார்?—என்பதையெல்லாம் உணர்ந்து பார்க்கும் எவரும்—குறிப்பாகக் காங்கிரஸ்காரர்களில் நாணயமுள்ளவர்கள் வேதனை அடையத்தான் செய்வர்!

"தேசியப் பணிக்காகத் தமது எல்லா சக்திகளையும் பயன்படுத்தி வெள்ளையரின் ஏகாதிபத்திய முகமூடியைக் கிழித்தெறிந்த வீரர் வ. உ. சிதம்பரனர்கள் எங்கே? அந்த நாளில் வெள்ளையர்களின் சுரண்டல் தன்மைக்குக் 'கமிஷன் ஏஜெண்டு'களாயிருந்து 'விதேசி' வியாபாரத்தால் சீமான்களான டி. டி கிருஷ்ணமாச்சாரிகள் எங்கே?

தேசிய முகாமின் நடுநாயகர்களாம்!

'இவ்விதக் கோஷ்டியினர்தான் இன்று தேசிய முகாமின் நடுநாயகர்களாய் விளங்குகின்றனர்! வெள்ளையர் ஆட்சியின்போது அவர்களுக்குத் 'தபாஷி'களாயிருந்த இந்த வர்க்கத்தினர்தான் இன்று நேரு சர்க்காரால் 'சபாஷ்' பட்டம் பெற்றுவருகின்றனர்!

அர்ப்பணித்த வாழ்வு பல்லக்காகிறதே!

"தேசியப் போராட்டத்தில் வீரர் வ. உ. சி. போன்றவர்கள் தங்களின் வாழ்வையே அர்ப்பணித்து வளர்த்த காங்கிரஸ், இன்று கிருஷ்ணமாச்சாரி போன்றவர்களுக்குப் பல்லக்காய்ப் பயன்படுகிறது.

"இந்த இழிநிலையை உண்மையான காங்கிரஸ்காரர்கள் எப்படித்தான் சகித்துக்கோண்டு வருகின்றனரோ? இன்றையக் காங்கிரஸ் இயக்கத்திலேயே தூய்மை உள்ளம் கொண்ட உழைப்பாளர்கள் இல்லையா யென்று ஐயுற வேண்டிய நிலையில்தான், தமிழ் நாட்டு அமைச்சர்களின் போக்கும், இந்தியப் பாராளுமன்றத்திலே காங்கிரஸ் பேரால் இடத்தை அடைத்துக் கொண்டிருக்கும் கோஷ்டியினரின் நடவடிக்கைகளும் இருந்து வருகின்றன!

வெட்கமில்லையே!

"மொழிவழி மாநில அமைப்புப் பிரச்சினையில், இந்திய நிதி அமைச்சராயிருந்த சிந்தாமணி தேஷ்முக் தமது பதவியை நேரு சர்க்காரின் முகத்தில் வீசி எறிந்தார்! ஆனல் தோழர் டி. டி கிருஷ்ணமாச்சாரியோ அவர் வீசியெறிந்ததைச் சிறிதும் வெட்கமின்றி வழித்தெடுத்துக்கொண்டார்!

தன்மான உணர்வு வேண்டாமா?

"பம்பாய் மாநிலம் மராட்டிய மண்டலத்தில் சேர்க்கப்பட வேண்டும் என்ற பிரச்சினையில் தோழர் தேஷ்முக் அவர்களுக்கிருந்த மான உணர்ச்சி எங்கே? தேவிகுளம்-பீர்மேடு போன்றத் தமிழ்ப் பகுதிகள் தமிழகத்துடன் சேர்க்கப்பட வேண்டும் என்ற பிரச்சினையில் காங்கிரஸ்காரர்களுக்கும் குறிப்பாக அமைச்சர்களுக்கும் இருந்தக் 'தன்மான' உணர்ச்சி எங்கே? அந்தத் தன்மான உணர்ச்சி சிறிதும் இல்லாதது மட்டுமல்ல—பிற மாநிலத்தவர் தங்களின் மொழிவழி உரிமைப் போரில் நேரு சர்க்காரின் அநீதிகளை எதிர்க்கும் முகத்தான் தாங்கள் வகிக்கும் பதவிகளை வீசி எறியும்போது அதற்காக நாக்கைத் தொங்கவிட்டுக் கொண்டு ஓடுகின்றனர்!

"மற்ற மாநிலங்களில் அமைச்சர்கள்—இந்திய சர்க்காரில் பதவி வகிக்கும் பெரிய மந்திரிகள் கூடத் தங்கள் தங்கள் மாநிலங்களின் உரிமைக்காகப் பதவிகளையே துச்சமாகக் கருதித் தங்கள் இன,மொழி மக்களின் தன்மானத்திற்கு ஊறு நேராவண்ணம் உறுதியாய் நிற்கின்றனர்!

தாயக உரிமையை விலை பேசுவதா?

"ஆனல் தமிழகத்தில் ஆட்சி புரியும் காமராசர்களும் இந்திய சர்க்காரில் இடம் பெற்றுள்ள கிருஷ்ணமாச்சாரிகளும், தாயகத்தின் உரிமையை விலை பேசிப் பதவி வேட்டையாடுகின்றனர்!

"காங்கிரஸ் பேரால் நடந்துவரும் இந்த அக்கிரமங்களை எல்லாம் இன்னும் எத்தனை காலத்துக்கு அனுமதிக்கப் போகிறீர்கள்?—என்றுதான் திராவிட முன்னேற்றக் கழகமும் அதன் துணையாக நின்று பணியாற்றும் வ. உ. சி. மன்றமும் பொதுமக்களாகிய உங்களைப் பணிவன்புடன் கேட்கின்றன.

"வெள்ளையரின் ஏகாதிபத்தியத்தை எதிர்த்து அன்று கப்பலோட்டி, தங்களின் மூதாதையர் கடல் கடந்து வாணிபம் நடத்திய வீரப் பரம்பரையினராவர் என்ற பெருமையை நிலைநாட்டிய செக்கிழுத்த சிதம்பரனரின் கனவுகள் என்ன ஆயிற்று? தென்னட்டு வீர மகனர் அன்று—பிரிட்டிஷ் ஆட்சியின்போது—கப்பலை மிதக்கவிட்டார்; இன்று சுதந்திர ஆட்சியில் வடநாட்டு ஹீராசந்த்கள் கப்பல் கம்பெனிக்கு உரிமையாளர்களாகவும், தமிழன் அவர்களிடத்தில் கூலிகளாகவும் இருக்கும் அவல நிலையைத்தானே காண்கிறேம்?

தக்க பாடம் கற்பிக்க முனைந்தெழுவீர்!

"எனவே,நம் தாயகத்தின் உரிமையை விலை பேசி—பதவியில் ஒட்டிக்கொண்டு ஒய்யாரம் பேசிவரும் காங்கிரஸ்காரர்களுக்கு அடுத்து நடைபெறவிருக்கும் பொதுத் தேர்தலில் தக்கபாடம் கற்பித்து வ. உ. சி. போன்றத் தலைவர்களின் எண்ணத்தை நிறைவேற்றி வைக்கும் நற்பணியில் ஈடுபட்டுள்ள திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும அதற்கு உற்றத் துணையாயிருந்துத் தொண்டாற்றிவரும வ. உ. சி. மன்றத்திற்கும் உங்களின் ஆதரவைத் தருமாறு கேட்டுக் கொள்கிறேன்."

என்று, 10-9-56 அன்று செங்குன்றத்தில் நடைபெற்ற வ. உ. சி. மன்ற 4-ம் ஆண்டு விழாவில் துணைப்பொதுச் செயலாளர் என். வி. நடராசன் அவர்கள் பேசுகையில் குறிப்பிட்டார்.

திருப்திக்ரமாக இருக்கிறதாம்

உணவுநெருக்கடியைச் சமாளிக்க உணவுக் கட்டுப்பாடு கொண்டு வரும் யோசனையை அரசாங்கம் கைவிட்டுவிட்டதாகவும், 1952-ம் ஆண்டில் இருந்த நிலைமையைக் காட்டிலும் தற்போது உணவு நிலைமை திருப்திகரமாக இருப்பதாகவும் மத்திய அரசாங்க உதவி உணவு மந்திரி கிருஷ்ணப்பா குறிப்பிட்டிருக்கிறராம்.

கூட்டம் நடத்தாதே! மின்சாரம் தர முடியாது!

இடம் இருள்சூழ்ந்து கிடந்த பரிதாபம்! தலைவர்கள் முகத்தில் அசடுவழிந்த விநோதம்!

சமாதான முயற்சிகள் தோற்றன! பேச முடியாது காங்கிரசார் வெளியேறினர்!

மகா குசராத் கோருவோரின் உரிமை முழக்கம் வென்றது!

தேசாய் என்ன செய்யப் போகிருர்?

அகமதாபாத், செப். 17—

இந்நகர் காலுபூர் பகுதியில் காங்கிரஸ் கூட்டம் ஒன்றை நடத்த விளம்பரம் செய்யப்பட்டது. கூட்டம் துவங்குவதற்கு அரைமணி நேரத்திற்கு முன்னதாக ஏறத்தாழ 300 நபர்கள் அவ்விடத்தில் மகா குசராத் கோரி பெரும் முழக்கமிட்டனர்.

அதுவுமன்றி, கூட்டம் நடைபெற இருந்த அந்த இடத்தை இருள் சூழ்ந்து கிடந்தது. காங்கிரஸ் கூட்டத்திற்குத் தேவைப் படும் மின்சார இணைப்பைக் கொடுத்து உதவ, அப்பகுதியில் இருந்தவர்கள் கண்டிப்பாக மறுத்துவிட்டதே, இருள் கப்பிக் கிடந்ததற்குக் காரணமாகும்.

மகா குசராத் கோருவோரை சமாதானப்படுத்தி, எப்படியும் காங்கிரஸ் கூட்டத்தை நடத்திவிட வேண்டுமென ஆமதாபாத் நகராட்சி மன்றத்தின் உறுப்பினரான சாந்திலால் ஜியா பெரு முயற்சி எடுத்துக்கொண்டார். அதுபோன்றே நகர காங்கிரஸ் உறுப்பினரான குலாம் அய்பீர் மோமின் என்பவரும் முயன்று பார்த்தார்.

ஆனல், மகாகுசராத் கோரிக்கையினரோ கொஞ்சமும் விட்டுக் கொடுப்பதாக இல்லை. எனவே, இறுதியில் காங்கிரஸ் கூட்டத்தை அறிவித்தபடி நடத்த முடியாமல், கூட்டப் பொறுப்பாளர்கள் வெளியேறிவிட்டனர்.

குறிப்பு:—இத்தொடர்பில் தாம் பேச இருந்தக் கூட்டத்திற்கு ஒருவர்கூட வரவில்லை எனக் காரணங்காட்டி பம்பாய் முதல் மந்திரி மொரார்ஜி தேசாய் உண்ணுநோன்பு இருந்ததும், ஒரு கிழமை கழித்து நோக்கம் வெற்றி பெற்றுவிட்டதாகக்கூறி அவர் உணவருந்த முன்வந்ததும் சிந்திக்கத்தக்கது. மகா குசராத் கோருவரின் பிடி அங்கு தளராது இருப்பது அறியும் முதலமைச்சர் என்ன செய்யப் போகிருரோ?

அனுமதியின்றி பாதை அமைத்ததற்கு கண்டனம்!

திறந்துவைக்க மறுத்தாராம் காமராசர்

திருச்சி, செப். 15—

திருச்சிக்கு 6 மைல் தூரத்தில் உள்ள எசனைகோரை கிராமத்தில் ஓர் 'ருசிகர நிகழ்ச்சி' நடைபெற்றதாம்.

மூன்று பர்லாங்கு நீளமுள்ள ஓர் பாதையை நல்ல நஞ்சை நிலங்களின் குறுக்கே புதிதாக, அந்த நிலத்தின் சொந்தக்காரர்களின் அனுமதி பெருது அந்தக் கிராம மக்கள் அமைத்துவிட்டு, முதலமைச்சர் காமராசரைத் திறந்து வைக்குமாறு கேட்டுக்கொண்டனராம்.

சர்க்காரே சாலை அமைக்கப் போவது தெரிந்திருந்தும், அவசரப்பட்டு தவருன போக்கில் அந்தக் கிராம மக்கள் ஈடுபடுவதைக் கண்டித்தாராம் காமராசர்.

இதேபோன்று மற்ருெரு பாதையும் தாத்தனூரில் அமைக்கப்பட்டிருப்பதாகவும், அதையும் காமராசர் திறந்துவைக்க மறுத்ததாகவும் கூறப்பட்டுள்ளது.

பாகிஸ்தானிலேயே லீக் செல்வாக்கு இழந்துவிட்டதாம்!

கேலி பேசுகிருர் பண்டித பந்த்

போபால், செப். 15—

சமீபத்தில் 'மதத் தலைவர்கள்' என்ற புத்தகத்தினுல் ஏற்பட்ட சம்பவங்களை சுட்டிக்காட்டி 'மக்கள் வகுப்புப் பூசல்களைக் கிளப்பும் முறையிலோ, சமூகத்திற்கு விரோதமான காரியங்களிலோ ஈடுபடாமல், நாட்டின் முன்னேற்றத்திற்காகவும் அமைதி நிலைக்கவும், ஒற்றுமை ஓங்கவும் பாடுபட வேண்டும்' என்று உள்நாட்டு அமைச்சர் பண்டித பந்த் இங்கு நடைபெற்றப் பொதுக்கூட்டத்தில் கேட்டுக் கொண்டார்.

தேவையான நடவடிக்கையை அரசாங்கம் எடுத்துக்கொண்டும் கூட, வகுப்புவாதத்தைக் கிளப்பும் வகையிலேயே முஸ்லீம்களில் சிலர் வெறிச் செயல்களில் ஈடுபடுவதையும் மதப்பூசல்களை உண்டாக்குவதையும் அவர் கண்டித்தார் எனத் தெரியவருகிறது.

'இந்து ராஜ்' என்று கூச்சலிடுகிறவர்கள், முஸ்லிம் லீகிற்கு நேர்ந்த கதியை ஓர் படிப்பினையாகக்கொள்ள வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டாராம்!

பிறந்த நாட்டிலேயே முஸ்லீம் லீக் மதிப்பிழந்து—பாகிஸ்தானில் செல்வாக்கிழந்து வருவதாகவும் அவர் கேலி பேசினுராம்!

தென்னுட்டில் இரும்பு, செம்புதாதுபடிவங்கள்

தென்னிந்தியாவில் அநேக மாவட்டங்களில் உள்ள இரும்பு, செம்பு தாதுப் படிவங்களின் அளவு மதிப்பீடுகள் பற்றிய பின்வரும் தகவல்களை, மக்கள் சபையில், மத்திய இயற்கை வள மந்திரி தெரிவித்தார்:—

அனந்தப்பூர் மாவட்டத்தில் 60 சத விகிதம் இரும்பு அடக்கமுள்ள 5,00,000 டன் ஹெமடைட் தாதுப் பொருளும், கடப்பை மாவட்டத்தில் 3,00,000 டன் இரும்புக் தாதுப் படிவங்களும், கர்னூல் மாவட்டத்தில் 48 முதல் 65 சதவிகிதம் வரை இரும்பு அடக்கமுள்ள 37,14,000 டன் ஹெமடைட் தாதுப் பொருளும், சித்தூர் மாவட்டத்தில் சில பகுதிகளில் கொஞ்சம் இரும்புத் தாதுப் பொருளும் இருப்பதாக மதிப்பிடப்பட்டிருக்கிறது.

கடப்பை, கர்னூல் ஆகிய மாவட்டங்களில் செம்புத் தாதுப் படிவங்கள் இருப்பதாக வெகுகாலத்துக்கு முன்பே தெரியவந்திருக்கிறது. ஆனல் பெரும்பாலான இடங்களில் அப்படிவங்கள் ஆங்காங்கே சிதறிக் கிடக்கின்றன.

நூறு வயதான பெரியவர்கள்!

40,000 பேர் ரஷ்யாவில் உள்ளனராம்

மாஸ்கோ, செப். 17—

ரஷ்யாவில் சுமார் 40,000 பேருக்குமேல் நூறு வயதைத் தாண்டிய பெரியவர்கள் இருக்கிருர்கள் என்று கணக்கிடப்பட்டிருக்கிறதாம்.

இவர்கள் எல்லோர், எப்போதும் மாமிசம் உண்பவர்களாகவும், இல்வாழ்க்கையில் ஈடுபட்டவர்களாகவுமே இருந்துள்ளனர் என்றும், மாமிசம் உண்ணுதவர்களாகவோ, துறவு நிலை அடைந்தவர்களாகவோ இருந்ததில்லையென்றும் கூறப்பட்டுள்ளது!

இந்த எண்ணிக்கையில் பெரும் பகுதியினராக மலைவாசிகள் இருக்கின்றனர் என்றும், மலைவாசிகளுக்குப் புதிய மதுவும் மலைக்காற்றும் கிடைக்கின்றன என்றும் இந்தத் தகவலை வெளியிட்டுள்ள 'ஒகோவ் நியக்' என்ற ரஷ்யப் பத்திரிகை ஒன்று கூறுகிறது.

20-வது ஆண்டு நினைவு நாள் விழா

ஏழை மாணவர்களுக்குக் கைத்தறி ஆடைகள்

15—9—56ல், சேலம் மாவட்டம் போளத்தனூரில், திரு. பி. வி குப்பையாண்டி அவர்கள் தலைமையில், தோழர் க. சிவப்பிரகாசம் அவர்களது இளங்கோ இல்லத்தில் திரு வை. கந்தசாமி அவர்களின் 20-வது ஆண்டு நினைவு நாள் விழா நடைபெற்றது. திரு. 'மேகலை' அவர்கள், அண்ணுரின் படத்தைத் திறந்து வைத்துத் 'திருக் குறள்' என்பதுபற்றிப் பேசினுர். திரு. கே. சி. சோலைமுத்து அவர்கள், 'நினைவு நாள் கொண்டாட்டம்' என்பது பற்றியும், திரு. சொ. அமணிவ சகம் அவர்கள் அண்ணுரின் வாழ்க்கை வரலாறு குறித்தும பேசினர். பிறகு ஏழை மாணவர்களுக்குக் கைத்தறி ஆடைகளும் போத்தனூர் நாட்டாண்மைக் கழக உயர்நிலைப் பள்ளிக்கும், வேலூர் கந்தசாமி உயர்நிலைப் பள்ளிக்கும் சுமார் ரூ. 100 மதிப்புள்ள 'வெள்ளி உலா'க் கேடயங்களும் வழங்கப்பட்டன. ஏழைகளுக்கு உணவும் அளிக்கப்பட்டது தோழர்கள் க. சிவப்பிரகாசம், கணேசன் ஆகியோர் விழாவிற்கு வந்திருந்தோரை வரவேற்றனர்; இவ்விழாவின் நினைவாக 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ 3 நன்கொடை தரப்பட்டது—வரப்பெற்ருேம் —நன்றி— பொறுப்பாளர்.

சென்னை 16-வது வட்டத்தில் கொடியேற்று விழா

திராவிட நாடு விடுதலை குறித்து விளக்கம்

17—9—56 காலை சென்னை 16-வது வட்டம் தி. மு. கிளைக் கழகச் சார்பில், திராவிட நாடு பிரிவினை வாரக் கொண்டாட்டம் தோழர் சி. பஞ்சாட்சரம் தலைமையில் நடைபெற்றது.

காலை 8 மணிக்கு, 45 அடி உயரமும், இணைப்புகள் எதுவும் இல்லாததுமான ஓங்கிவளர்ந்த கம்பத்தில், திராவிட முன்னேற்றக் கழகக் கொடி பறக்கவிடப்பட்டது.

கொடி மரம் முழுவதும் சிவப்பு—கருப்பு வர்ணங்கள் தீட்டப்பெற்றுள்ளது. எஸ். வி. அம்பாள் கம்பெனியின் உரிமையாளரான தோழர் வேதாசலம் அவர்கள், கம்பத்தில் பூசுவதற்கான தேவையான வர்ணங்களை நன்கொடையாகக் கொடுத்து உதவினுர். அக்கம்பத்தின் உச்சியில் ஒரு 'மெர்க்குரி' மின்சார விளக்கு நிரந்தரமாகப் பொருத்தப்பெற்றுள்ளது.

கொடியேற்று விழா முடிந்தவுடன், தோழர் சி. பஞ்சாட்சரம் தலைமையில் கழகப் பணிமனையில் ஒரு கூட்டம் நடைபெற்றது.

தி. மு. கழகம் இதுவரை நாட்டு வளர்ச்சிக்காகச் செய்துள்ள பணி, அது இப்பொழுது பொதுத் தேர்தலில் நேரடியாகக் கலந்துகொள்ள உத்தேசித்திருப்பதின் முக்கியத்துவம் ஆகியவை பற்றித் தோழர் சி. பஞ்சாட்சரம் சொற்பொழிவாற்றினுர்.

திராவிட நாடு தனியே பிரிந்து சுதந்திர நாடாக இயங்கச் செய்வதற்குக் கழகத் தோழர்கள் எவ்வாறு பணியாற்ற வேண்டுமென்பது பற்றித் தோழர்கள் ப. ஆசைமுத்து, ஆர். என். பத்மநாபன், எஸ். கோபால், கே. கணபதி, டி. முத்து ஆகியோர் பேசினர்.

விருதம்பட்டு தா. ச. பொதுக்கூட்டம்

14—9—56 மாலை 6 மணிக்கு, விருதம்பட்டு தாழ்த்தப்பட்டோர் சம்மேளனப் பொதுக்கூட்டம், அம்பேத்கார் வீதியில் தோழர் பத்மநாபன் தலைமையில் நடைபெற்றது. தோழர் கிருஷ்ணசாமி 'தாழ்த்தப்பட்டோரும் பொதுத் தேர்தலும்' என்ற பொருள் பற்றிப் பேசுகையில், காங்கிரஸ் ஆட்சியின் கோணல்களைப் பற்றியும், ஆரியர் சூழ்ச்சி, இந்து மதத்தின் ஊழல்கள் ஆகியவை பற்றியும், வருகின்ற பொதுத் தேர்தலில் தமிழகத்திலுள்ள எல்லா முற்போக்குக் கட்சிகளும் ஒன்றுசேர்ந்து காங்கிரஸ் ஆட்சியை முறியடிக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டார் தோழர் எஸ். ஆர். முனுசாமி இயக்க வளர்ச்சி பற்றிப் பேசினுர்.

அண்ணு படிப்பகம் துவக்க விழா

17—9—56 மாலை 5½ மணிக்கு, சென்னை—வண்ணை சோலையப்பன் தெருவில் தோழர் எஸ். பி. தங்கய்யா தலைமையில் மேற்படி படிப்பகத் துவக்க விழா நடைபெற்றது தோழர் வே. கபிலன் கழகக் கொடி ஏற்றிவைத்தும், தோழர் என். வி. மதியண்ணன் படிப்பகத்தைத் திறந்துவைத்தும், தோழர் சி. நலங்கிள்ளி படிப்பகத்தின் நோக்கம் பற்றியும் சொற்பொழிவாற்றினர்.

1955—56-ல் சுமார் ரூ 53,94000 மதிப்புள்ள 2·709 டன் கச்சா கிளிசரைனும், சுத்தம் செய்யப்பட்ட கிளிசரைனும் இந்தியாவிலிருந்து ஏற்றுமதியாயிற்று.

பாரதியார் நினைவுநாள்

11-9-56 மாலை கொழும்பு இலக்கிய மன்றச் சார்பில், தோழர் வி. எஸ். முருகன் தலைமையில் நடைபெற்ற பாரதியார் நினைவு விழாவில், தோழர்கள் இரா. அதிமணி. ஏ. எஸ். மணவைத்தம்பி, டி. எம். பீர்முகமது, மு. வே. பெ. சாமி, யோவான், பி எம். ஜலால், தர்மதாசன், ஜே. சோமசுந்தரம் ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

தலைவர் தமது உரையில் பாரதியாரின் கவிதைகள் தாய் நாட்டின் விடுதலையை வற்புறுத்துகின்றன. சமுதாயச் சீர்கேடுகளைச் சாடுகின்றன' என்று குறிப்பிட்டார்.

❀ ❀ ❀

14-9-56 மாலை 4 மணியளவில் கமுதி கழக உயர்பள்ளி இலக்கிய மன்றச் சார்பில், மேற்படி விழா பள்ளித் தலைமைத் தமிழாசிரியர் திரு. சீதாராமன் தலைமையில் நடைபெற்றது. திரு. வில்லிமாறன் பாரதியின் கருத்துக்களை நன் முறையில் எடுத்துக் காட்டினுர். பின், திரு. க. மாறன் அவர்கள் பாரதியின் பாடல்கள் பலவற்றை அரசாங்கம் வெளியிட அஞ்சியதை எடுத்துகூறி சிறப்புச் சொற்பொழிவாற்றினுர்.

திருமணங்கள்

7—9—56 காலை 9 மணியளவில் உடையார்பாளையம் வட்டம் வீராக்கனில் தோழர் வெங்கடாசலம்—தோழியர் இராசாத்தி திருமணம் தோழர் இரா. நடராசன் தலைமையில் நடந்தது. மணமக்களைப் பாராட்டித் தோழர்கள் கே. குஞ்சிதபாதம், சு. இளநாகன், என். சிட்டப்பா, எஸ். ஆர். இராதா ஆகியோர் பேசினர். இத்திருமண நினைவாக 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ. 2 நன்கொடை தரப்பட்டது—வரப்பெற்ருேம்— நன்றி— பொறுப்பாளர்.

* * *

வலங்கை கருவிளச்சேரியில் தோழர் இராமசாமி—தோழியர் முத்துலட்சுமி திருமணம் 9-9-56 காலை தோழர் கே. எஸ். சௌந்தரராசன் தலைமையில் நடைபெற்றது. மணமக்களைப் பாராட்டித் தோழர்கள் எஸ் ஆர். இராதா, என். சிட்டப்பா ஆகியோர் பேசினர். இத்திருமண நினைவாக 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ. 1 நன்கொடை தரப்பட்டது — வரப்பெற்ருேம்— நன்றி—பொறுப்பாளர்.

அனுதாபம்

16-9-56 மாலை 4 மணிக்கு, கன்னிவாடிப் பெரியார் திரு. கே. எஸ் எஸ். அவர்களின் பேரனும் தோழர் கே. எஸ். பெரியசாமி அவர்களின் செல்வனுமான இளங்கோ திடீரென இயற்கையெய்தியமை குறித்துத் தாரை வட்ட தி. மு. கழகச் சார்பில் அனுதாபம் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

காங்கேயன்—மங்களம்மாள்



சேலம் மாவட்ட தி. மு. கழகச் செயலாளர் திரு ஜி. பி. சோமசுந்தரம் அவர்களது புதல்வர் காங்கேயன்—தோழியர் மங்களம்மாள் திருமணம் 19—8—56-ல், பேளுக்குறிச்சியில் அண்ணு அவர்கள் தலைமையில் சிறப்புற நடைபெற்றது. வாழ்க மணமக்கள்.

50,000 நிலக்கரிச் சுரங்கத் தொழிலாளர் வேலைநிறுத்தம்

இலவச உணவு, கூலி உயர்வு கோரி நடவடிக்கை

கல்கத்தா, செப். 17—

அரிசி இலவசமாகத் தரப்பட வேண்டும்; போனஸ் தரப்பட வேண்டும்; கூலி உயர்வு கொடுக்க வேண்டும் — என்பன போன்ற கோரிக்கைகள் பலவற்றிற்காக ராணிகஞ்ச் பிரதேசத்தில் உள்ள நிலக்கரிச் சுரங்கங்களைச் சேர்ந்த சுமார் 50 ஆயிரம் தொழிலாளர்கள் இன்று முதல் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டிருக்கின்றனர்.

இதை ஒட்டி தொழிற் சங்கத்தைச் சேர்ந்த 5 பேர்கள் கைது செய்யப்பட்டிருக்கின்றனராம்.

இந்தியாவில் உற்பத்தியாகும் நிலக்கரியில் பெரும் பகுதியைத் தரும் 26 சுரங்கங்கள் இந்த வேலை நிறுத்தத்தால் பாதிக்கப்பட்டுள்ளன. இந்த வேலை நிறுத்தம் நீடிப்பது இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டம் வெற்றிகரமாக அமுல் செய்யப்படுவதைத் தடை செய்யும் என்றும் கருதப்படுகிறதாம்.

மின்சார விநியோக நிலயங்கள், பலவகை வாயு உற்பத்திசாலைகள், இரயில்வேக்கள் இவற்றை எல்லாம் வேலை நிறுத்தம் பாதிக்கிறது.

மொத்தமாக எல்லாத் தொழிலாளர்களுக்குமாகச் சேர்த்து ஆண்டுதோறும் ரூ. 10 கோடிவரை சம்பள உயர்வு தருவதென தொழில் நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியிருக்கும்போது தொழிலாளர் வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டிருப்பது ஒழுங்கற்றதாகும் என்று மாநில, மத்திய அரசுகள் சுட்டிக்காட்டியுள்ளனவாம்.

ஆட்குறைப்புக்குக் கண்டனம்

தற்காப்பு இலாகா தொழிலாளர் அடையாள வேலை நிறுத்தம்

பம்பாய், செப். 18—

தற்காப்பு இலாகாவில் ஆட்குறைப்பு நடைபெறுவதை ஒட்டி பம்பாயிலுள்ள தற்காப்பு இலாகா பிரிவு ஒன்றிலும் 30 'சிவிலியன்' ஊழியர்கள் நீக்கப்படுகிறார்கள் என்பதால் அதைக் கண்டிக்கும் பொருட்டு, செவ்ரியில் உள்ள தளவாட இடங்குத் தொழிலாளர்கள் 700 பேர் இன்று ஒரு நாள் அடையாள வேலை நிறுத்தம் செய்தனர் எனத் தெரியவருகிறது.

★

வேலைநிறுத்தம் செய்யக்கூடாதாம்

பூனா, செப். 16—

இராணுவத் தளவாட நிலயங்களில் ஆட்குறைப்பு செய்வதென அரசாங்கம் முடிவு செய்து சில இடங்களில் அதனை நடைமுறைக்குக் கொண்டுவந்ததை எதிர்த்துத் தொழிலாளர்கள் ஆங்காங்கு வேலை நிறுத்தம் செய்வதைக்கண்டித்தும், வேலை நிறுத்தம் செய்வது தொழிலாளர்களின் உரிமை என்றாலும், தங்கள் குறைகளை சமாதான முறையிலேயே தீர்த்துக்கொள்ள வேண்டுமென்றும் அமைச்சர் காட்கில் ஓர் பொதுக்கூட்டத்தில் குறிப்பிட்டிருக்கிறார்.

★

200 பேர் ஆட்குறைப்பு

சட்டசபை உறுப்பினர் உண்ணாவிரதம்

ஐதராபாத் சட்டசபையில் உள்ள பி. சோ. கட்சி உறுப்பினர் ஜே வெங்கடேசம் என்பார், சர்க்கார் நடத்துகிற பஸ் போக்குவரத்தைச் சேர்ந்த 200 தொழிலாளர்களை ஆட்குறைப்புச் செய்ததைக் கண்டித்தும், அவர்களை மீண்டும் வேலைக்கு எடுத்துக்கொள்ளக் கோரியும், சர்க்கார் அலுவலகத்தின் முன் காலவரையறையின்றி உண்ணாவிரதம் துவங்கியிருக்கிறாராம்.

3 - ஆண்டு பட்டப் படிப்பு

மூன்று ஆண்டு பி. ஏ., பி. எஸ். ஸி. பட்டப் படிப்புத் [illegible] திட்டங்களை [illegible] யும் சென்னை [illegible] வற்றுக்கொண்டு 1957 - 58 முதல் அமுல் நடத்த முடிவு செய்துள்ளது.

திருச்சி மாவட்ட தி. மு. கழகத் தோழர்களுக்கு:

"திருச்சியில் 23-9-56-ல் திராவிட நாடு பிரிவினை நாள் கூட்டத்தில் பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் கலந்துகொள்ளுகிறார்.

"அன்று மாபெரும் ஊர்வலமும் பொதுக்கூட்டமும் நடைபெறும். மாவட்டத்தின் எல்லாக் கிளைக் கழகத் தோழர்களும் தங்கள் கிளைக் கழகக் கொடிகளுடன் கலந்துகொண்டு, ஊர்வலத்தையும் பொதுக்கூட்டத்தையும் சிறப்பிக்க வேண்டுமாறு கேட்டுக்கொள்கிறேன்"

என்று, திருச்சி மாவட்ட தி. மு. கழகச் செயலாளர் அ. பெ. தர்மலிங்கம் அறிவிக்கிறார்.

★

கோலார் தங்கவயலில் 12,000 தொழிலாளர் வேலைநிறுத்தம்

கோரிக்கைகளை ஏற்க மறுப்பதற்குக் கண்டனம்

இராபர்ட்சன்பேட்டை, செப். 18—

சுமார் 12,000 தொழிலாளர்கள் —கோலார் தங்கச் சுரங்கத்தில் பணிபுரிபவர்கள் தங்களின் நீண்டநாளையக் கோரிக்கைகளை நிர்வாகத்தினர் ஏற்க மறுத்து வருவதை எதிர்த்து இன்று வேலை நிறுத்தம் செய்தனர் எனத் தெரியவருகிறது.

இராபர்ட்சன்பேட்டை, ஆண்டர்சன்பேட்டை ஊர்காம் நகர்களின் முக்கியத் தெருக்கள் வழியாக ஊர்வலம் வந்து அவர்கள் கூட்டம் ஒன்று நடத்தியிருக்கின்றனர்.

★

ஐதராபாத்தில் 11,000 தொழிலாளர் வேலை நிறுத்தம்

குடிநீர், மின்சார, மருத்துவ இலாகாக்கள் பாதிக்கப்படும்

சமரச முயற்சிகள் தோற்றதின் எதிரொலி

ஐதராபாத், செப். 17—

வரும் செப்டம்பர் 23-ந் தேதிக்குப் பிறகு வேலை நிறுத்தத்தில் ஈடுபடவிருக்கும் சர்க்கார் மற்றும் இதர நிறுவனங்களைச் சேர்ந்த 11,000 தொழிலாளர்களுக்கு ஆதரவு தருவது என சோஷலிஸ்டுகள் நடத்துகிற மாநில தொழிற் சங்கத்தின் கூட்டுச் செயற்குழு முடிவு செய்திருக்கிறதாம்.

சமரச முயற்சி தோல்வி

செப். 19-ந் தேதி முதல் வேலை நிறுத்தம் துவங்குவதாயிருந்தது; ஆனால் அதற்கிடையில், சமரச முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டதால் ஒத்திவைக்கப்பட்டது.

இப்போது சமரச முயற்சிகள் தோல்வியுற்ற நிலையில், வேலை நிறுத்தம் 23-ந் தேதியன்று மேற்கொள்ளப்படவிருக்கிறதாம்.

பாதிக்கப்படுபவை

இந்த வேலை நிறுத்தத்தால், குடிநீர், மின்சார விநியோகம் தடைப்படும். சாக்கடை சுத்தம் செய்யப்படமாட்டாது. மருத்துவமனைகளும் பாதிக்கப்படும் என்று கூறப்படுகிறது.

'சர்க்காருடன் கடுமையாகப் போராடுவோம்'

தபால்—தந்தி ஊழியர் மாநாட்டில் பேச்சு

"நல்ல ஊதியம், சரியான வாழ்க்கை நிலைமைகள் இவை தவிர ஊழியர்களுக்கு வேறெதுவும் தேவையில்லை; தபால்—தந்தி ஊழியர்களின் கோரிக்கைகளை சர்க்கார் ஏற்றுக்கொள்ள மறுத்தால், கட்டூர் [illegible] முறையில் [illegible] போராடுவோம்"

என்று தபால்—தந்தி ஊழிய என் மாநாட்டில் ஊழியர் தலைவர் பி. என். கோஷ் குறிப்பிட்டிருக்கிறார்.

காங்கிரசின் குலைந்து விட்ட கட்டுப்பாடு!

சென்னை, செப். 15—

"தனிப்பட்டவர்களால் நடத்தப்படும் அதிகாரபூர்வமற்ற மாநாடுகளில் காங்கிரஸ்காரர்கள்கலந்து கொள்ளக்கூடாது,"

என்று, காங்கிரஸ் குழுக்களுக்கு ஓர் கண்டிப்பான சுற்றறிக்கையை காங்கிரசின் மந்தரச் செயலாளர் பார்கவா என்பார் அனுப்பியிருப்பதாகத் தெரிகிறது.

தலைமை நிலயச் செய்தி :

தேர்தல் ஆய்வுக்குழுச் சுற்றுப்பயணம்

★

பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்களும், தேர்தல் ஆய்வுக்குழு உறுப்பினர்களான தோழர்கள் ஈ. வெ. கி. சம்பத், ஏ. வி. பி. ஆசைத்தம்பி, என். வி. நடராசன், கே. ஏ. மதியழகன் ஆகியோரும் அக்டோபர் திங்கள் 1-ம் நாளிலிருந்து 23-ம் நாள்வரை தமிழகத்தில் குறிப்பிட்ட இடங்களுக்குச் சென்று தங்கியிருந்து அந்த இடங்களைச் சுற்றியுள்ள தொகுதிகளைச் சார்ந்த கழகத் தோழர்களையும் கழக ஆதரவாளர்களையும் சந்தித்துப் பொதுத்தேர்தல் சூழ்நிலை குறித்து விவரம் அறிவார்கள்.

தேர்தல் சூழ்நிலை குறித்து விவரம் தெரிவிக்கக் கூடிய அந்தந்த தொகுதியிலுள்ள கிளைக் கழகத் தோழர்களும் ஆதரவாளர்களும் அன்புகூர்ந்து அந்தந்த மாவட்டச் செயலாளர்களுடன் தொடர்பு கொள்ள வேண்டுகிறோம்.

'அறிவகம்' சென்னை
19—9—56

—தலைமைக் கழகம் (தி. மு. க.)

திராவிட நாடு விடுதலை நாள் பொதுக்கூட்டங்கள்

★

மாதவரம் :

21—9—56 மாலை 5-30 மணிக்கு மாதவரம்-மங்குத்துரை தோட்டத்திலுள்ள தேசிங்கு திடலில் (பஸ் நிலயம் அருகில்) தோழர் மா. பெ. வேதாசலம் தலைமையில் நடைபெறும்; துணைப் பொதுச்செயலாளர் என். வி. நடராசன், தோழர் ஏ. கோவிந்தசாமி எம்.எல்.ஏ., தோழியர் சத்தியவாணிமுத்து, தோழர்கள் வி. எஸ். கோவிந்தராசன், ஏ. செயராசு ஆகியோர் பேசுவர்.

சாமிநாதபுரம்-சேலம் :

21—9—56-ல், 3-வதுவட்ட தி. மு. கழகச் சார்பில் விழா நடைபெறும்; காலை 9-மணிக்குக் கொடியேற்று விழாவும் குழந்தைகளுக்கு இனிப்பும் வழங்கப்படும்; மாலை 6-மணிக்கு தோழர் பி. கே. சித்தையன் தலைமையில் பொதுக்கூட்டம் நடைபெறும்; தோழர்கள் சி. பி. சிற்றரசு, சிற்றுளி—சுப்பிரமணியம், ஈ. ஆர். கிருட்டினன், வி. சிவப்பிரகாசம் ஆகியோர் பேசுவர்.

கெசமுடி :

21—9—56 மாலை, தி. மு. கழகச் சார்பில், தோழர் சோ. ஈசாக்கு தலைமையில் பொதுக்கூட்டம் நடைபெறும்; தோழர்கள் பலர் பேசுவர்.

தளவாய்புரம் :

21—9—56 இரவு 7-மணிக்கு, நெடுஞ்செழியன் திடலில், தோழர் சி. மலைக்கனி தலைமையில் நடைபெறும்; தோழர்கள் ஆ. மீ. அலிசேக் மன்சூர், சேதுராசு ஆகியோர் பேசுவர்.

சென்னை-சூளை :

21—9—56 மாலை 6-மணியளவில், ஊ. பு. அ. சௌந்திர பாண்டியனார் நினைவுப் படிப்பகச் சார்பில், பிரிவினை நாள் விழாவும் படிப்பக மூன்றாம் ஆண்டுவிழாவும் 1/26 ஆலத்தூர் சுப்பிரமணிய ஆச்சாரி தெருவில், தோழர் மு. கன்னியப்பன் தலைமையில் நடைபெறும்; தோழர்கள் என். சீவரத்தினம், ஏ. கே. வில்வம், தோழியர் அருண்மொழி ஆகியோர் பேசுவர்.

குனியமுத்தூர் :

21—9—56 மாலை 6-மணிக்கு, மாரியம்மன் கோவில் திடலில் நடைபெறும்; தோழர்கள் கி. மனோகரன், பாலசுந்தரம், தங்கமாணிக்கம் ஆகியோர் பேசுவர்; தோழர்கள் கு. அ. மனோகரன், ப. வெங்கடாசலம் இன்னிசை வழங்குவர்.

அம்மயநாய்க்கனூர் :

21—9—56 மாலை 6-மணிக்கு, பெருமாள் கோயில் முன்புள்ள திடலில், தோழர் இரா. அ. பரமசிவம் தலைமையில் நடைபெறும்; பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன், தோழர்கள் எஸ். முத்து, வசனப்பித்தன், முகதா, இராசன் ஆகியோர் பேசுவர்.

சேலூர் :

21—9—56 இரவு 8-மணிக்கு, அழகிரி மன்றச் சார்பில் மன்றப் பணிமனையில், தோழர் எஸ். ஏ. கைலைநன் தலைமையில் நடைபெறும்; தோழர்கள் பலர் பேசுவர்; தோழர்கள் அ. தேவராசன், மா. முருகன் இன்னிசையும், தேநீர் விருந்தும் நடைபெறும்.

சென்னை 47-வது வட்ட தி. மு. கழகப் பணிமனை திறப்புவிழா

20—9—56 மாலை 5-மணிக்கு, சைதை, ஜோன்ஸ் ரோடு பணிமனையில் மேற்படி திறப்புவிழாவும், திராவிட நாடு பிரிவினை நாள் பொதுக்கூட்டமும் நடைபெறும்; தோழர்கள் திருநாவுக்கரசு, சைதை-சம்பந்தம் கலந்து கொள்வர்.

திருச்சி நகர தி. மு. க. தோழர்களுக்கு அறிவிப்பு

★

"திருச்சி நகரத்தில் 23-9-56-ல் திராவிட நாடு பிரிவினை நாள் கொண்டாடப்படும்.

"காலை 9-மணிமுதல் 1-வரை பொதுச் செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் திருச்சி நகரத்தில் உள்ள எல்லாக் கிளைக் கழகங்களிலும் கொடியேற்றி வைப்பர்.

"மாலை 5-மணிக்கு மெயின் காட் கேட்டிலிருந்து மாபெரும் ஊர்வலம் புறப்படும்; 6-மணிக்கு டவுன் ஹால் முன்பு பொதுக்கூட்டம் நடைபெறும்.

"எனவே, திருச்சி நகரத்தில் உள்ள கிளைக் கழகங்கள் தங்கள் கிளைக் கழகக் கொடிகளாலும் தோரணங்களாலும் சிறப்பான முறையில் அலங்கரிக்கவும் பொதுச் செயலாளருக்குச் சிறிய ஓர் வரவேற்பு அளிக்கவும் மாலை நடைபெறும் ஊர்வலத்திலும் பொதுக் கூட்டத்திலும் கலந்துகொண்டு சிறப்பிக்கவும் வேண்டுகிறேன்"

என்று, நகர தி. மு. கழகச் செயலாளர் எம். எஸ். மணி அறிவிக்கிறார்.

சென்னையில் செப். 24-வரைக்காளராக கடைசி நாள்

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம்.ஏ. அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24, சூரியநாரா
[redacted]